இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 07.02.2026

# ஒரு அவையில் பேசவில்லை; மறு அவையில் பேச்சு வரவில்லை!

நாடாளுமன்ற நடவடிக்கைகளில் இதுவரை இப்படி நடந்தது இல்லை. குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பிரதமர் பேசாமலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. மக்களவையில் பிரதமர் மோடி பேசவில்லை. பிப்ரவரி 4 மாலை 5.00 மணிக்கு அவர் பேசுவார் என்றார்கள். பேசவில்லை. பேச வரவில்லை. அதற்கு வசதியாக 3.00 மணிக்கே அவையை ஒத்தி வைத்துவிட்டார் சபாநாயகர் ஓம் பிர்லா. 5 ஆம் தேதியன்று காலையில் பிரதமர் பேசுவார் என்று சொல்லப்பட்டது. அப்போதும் பிரதமர் மோடி பேசவில்லை.

**பிரதமர் பேசாமல் போனதற்கு சபாநாயகர் ஓம் பிர்லா சொன்ன காரணம்தான் வெட்கித் தலைகுனிய வேண்டியதாக இருந்தது.**

இதோ சபாநாயகர் ஓம் பிர்லா சொல்கிறார்...

“மக்களவையில் சில எம்.பி.க்கள் முறையற்ற முறையில் நடந்து கொண்டனர். குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரை நிகழ்த்த பிரதமர் மோடி மக்களவைக்கு வருவதாக இருந்தார். அவர் வருவதற்கு முன்பாக, காங்கிரஸ் பெண் எம்.பி.க்கள் பிரதமர் இருக்கையைச் சுற்றி வளைத்திருந்தனர்.

பிரதமரின் உரையின்போது, காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்யலாம் என்று எனக்கு முன்கூட்டியே தகவல் கிடைத்தது. அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் அது தேசத்தின் கண்ணியத்துக்கு கடும் சேதத்தை ஏற்படுத்தி இருக்கும். அதனால்தான், நாடாளு மன்றத்துக்கு வர வேண்டாம் என பிரதமரை நான் கேட்டுக் கொண்டேன்” என்று சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்தார்.

**இவர் சபாநாயகராக இருப்பதற்குப் பதிலாக கதை எழுதப் போகலாம். பிரதமர் மோடிக்கு சபைக்கு வருவதற்குப் பயம். உள்ளே வந்தால், யார் யார் என்ன கேள்வியை எழுப்புவார்களோ என்ற பயம். மக்களவை உறுப்பினர்களை தலைநிமிர்ந்து பார்க்க முடியாத நிலையில்தான், ‘பேச வேண்டாம்’ என்று முடிவெடுத்து இருக்கிறார் பிரதமர் மோடி. இதற்கு அவர்களாகக் கண்டுபிடித்த காரணம் தான், பெண் எம்.பி.க்கள் பிரதமரைத் தாக்க முயற்சிக்கிறார்கள் என்பது ஆகும்.**

இந்த நாட்டின் பிரதமரை, இரண்டு மூன்று எம்.பி.க்களிடம் இருந்து காப்பாற்றுவதற்குக் கூட சபாநாயகர் ஓம் பிர்லாவால் முடியாதா? இவர் எப்படி 500க்கும் மேற்பட்ட எம்.பி.க்களை பாதுகாக்கப் போகிறார்? நாட்டின் பிரதமருக்கு நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு இல்லை என்று உலகநாடுகள் அறிந்தால் ‘லோககுரு’வின் இமேஜ் என்ன ஆகும்? சரியாதா? இதற்கு மேல் சரிவதற்கு என்ன இருக்கிறது என்று நினைக்கிறாரா ஓம் பிர்லா?

இந்தியாவைக் காக்கும் பிரதமர் மோடி, சபாநாயகர் ஓம் பிர்லாவின் நிழலில் ஒதுங்கியது இதுவரை நாடாளுமன்றத்தில் நடக்காதது.

மக்களவைக்கு வர முடியாத, பேச முடியாத, விளக்கம் அளிக்காத பிரதமர் மோடி, மாநிலங்களவைக்கு திடீரென வந்தார். வரும் போதே முகம் கடுமையான இறுக்கத்தில் இருந்தது. பேசத் தொடங்கினார். அவருக்கே பேச்சு வரவில்லை. எதிர்க்கட்சிகள் மிகக்கடுமையான எதிர்ப்புக் குரல்கள் எழுப்பினார்கள். இது போல எதிர்ப்புக் குரல்கள் வரும் போதெல்லாம், அதைப் பற்றிக் கவலைப்படாமல் பிரதமர் பேசுவார். எதிர்ப்பு அடங்கியதும், கிண்டல் அடிப்பார். இப்படி பல முறை நடந்துள்ளது.

ஆனால், இம்முறை வேறு மாதிரி நடந்து கொண்டார் பிரதமர். எதிர்க்கட்சிகளைப் பார்த்து, ‘அமைதியாக இருங்கள்’ என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். ‘எனக்கு பேச கஷ்டமாக இருக்கிறது’ என்றார். ‘என்னைப் பேச விடுங்கள்’ என்று பலமுறை கேட்டார். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவைப் பார்த்து பேசிய பிரதமர் மோடி, “கார்கே ஜி, உங்கள் வயதைக் கருத்தில் கொண்டு நான் சொல்கிறேன், தயவுசெய்து அமர்ந்து கொண்டு கோஷம் எழுப்புங்கள். உங்கள் ஆரோக்கியம் எங்களுக்கு முக்கியம்’ என்றார். எதிர்க்கட்சிகள் முழக்கம் கேட்டுக் கொண்டே இருந்தது. பிரதமரால் பேச முடியவில்லை. எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த பிறகு தான் நிம்மதி வந்தது பிரதமருக்கு.

அவரது வழக்கமான உரையாக அமையவில்லை. பேச்சு வராமல் திணறினார். கழிவிரக்கம் தேடும் வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.

ஆட்சியின் சாதனைகளைச் சொல்லாமல் தி.மு.க., காங்கிரஸ், இடதுசாரிகள், திரிணாமூல் காங்கிரஸ் போன்ற கட்சிகளை விமர்சித்துக் கொண்டு இருந்தார் பிரதமர். மேற்கு வங்கத்தில் சட்டமன்றத் தேர்தல் வரப் போவதால் அங்குள்ள திரிணாமூல் அரசைப் பற்றித்தான் குறைசொல்லி அதிகம் பேசினார்.

“காஷ்மீரில் சட்டப்பிரிவு 370 நீக்கத்திற்கு மாற்றம் கொண்டு வந்தோம், பாகிஸ்தான் பயங்கரவாதம், இடதுசாரி தீவிரம் ஒழிக்கப்பட்டது. இதனால், எதிர்க்கட்சியினர் எனக்கு சவக்குழி தோண்டப் பார்க்கின்றனர். ஆனால், தேசத்தின் கோடிக்கணக்கான மக்கள் எனக்குக் கவசமாக இருக்கும் வரை, அவர்களால் எதையும் செய்ய முடியாது” என்று அழுகாச்சி காவியம் வாசித்தார் பிரதமர்.

பாகிஸ்தான் பயங்கரவாதம் ஒழியவில்லை, அது இன்னமும் உயிரோடுதான் இருக்கிறது என்பதற்கு ஏராளமான சம்பவங்கள் உதாரணமாக நடைபெற்று வருகிறது. பிரதமருக்கு இதுவே தெரியவில்லை. இடதுசாரிகள் என்று மோடி நினைக்கும் கட்சிகள் வேறு, நக்சல் அமைப்புகள் வேறு. இதுவும் அவருக்குத் தெரியவில்லை.

சீனா இந்திய எல்லை ஆக்கிரமிப்பு குறித்து எந்த விளக்கமும் அவர் உரையில் இல்லை. எப்ஸ்டீன் பைல்ஸ் பற்றி விளக்கம் அளிக்கவில்லை. அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்தால் இந்தியாவுக்கு ஏற்படும் நெருக்கடிகள் குறித்து அவர் விளக்கம் அளிக்கவில்லை. விளக்கங்கள் ஏதுமற்ற விளக்க உரையாக அது இருந்தது. மாநிலங்களவையிலாவது பேசி பதிவு செய்யலாம் என்று வந்து, ஒப்புக்கு உரையாற்றியதைப் போல இருந்தது அவரது உரை.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!...

முதல் பக்கத் தொடர்ச்சி

எழுப்புவது போன்று, தங்களுடைய ஆசைகளை வெளிப்படுத்திக் கொண்டு இருந்தார்கள்! அதையெல்லாம் உடைத்து, தம்பி உதயநிதி அவர்கள், இளைஞரணிக்கு இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் நிர்வாகிகளை நியமித்து, சாதனை செய்திருக்கிறார்!

இது போதாது என்று, மண்டல அளவில் இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு என்ற பெயரில் மாநாடுகளை நடத்துகிறார்! ஏற்கனவே, திருவண்ணாமலையில் ஒன்றரை லட்சம் நிர்வாகிகளை கூட்டி, வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டை நடத்தி விட்டார்! மிக கச்சிதமாக நடந்த அந்த மாநாட்டைப் பார்த்து, எதிர்க்கட்சிகளில் இருக்கும் பலருக்கும், தூக்கம் போய்விட்டது. 5 லட்சம் நிர்வாகிகளை ஒரு கட்சியின் துணை அமைப்பில் நியமித்து வேலை செய்வதைப் பார்த்தால், மற்ற கட்சிகள் அனைத்தும் பின்பற்றும் ப்ளூ-ப்ரிண்ட்-ஐ தி.மு.க. இளைஞரணிதான் கொடுக்கப் போகிறது என்று நினைக்கிறேன்.

இளைஞரணியின் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்களாக இருக்கும் 12 ஆயிரத்துக்கும் அதிகமான நிர்வாகிகளைச் சேர்த்து, கிளை - வார்டு - பாகம் அளவிலும் 5 லட்சம் நிர்வாகிகளை நியமிக்க வேண்டும் என்று இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்கள் ‘மிஷன் மோட்’-இல் வேலை செய்திருக்கிறார். அதிலும், இதை அவர் செய்து காட்டியிருக்கும் செயல்முறையே மலைப்பை ஏற்படுத்துகிறது.

தமிழ்நாடு முழுவதும் விருப்ப மனுக்கள் பெற்று, அந்தத் தகவல்களை ‘டிஜிட்டைஸ்’ செய்து, அவர்களை எல்லாம் அன்பகத்திற்கே நேரில் அழைத்து ‘வெரிஃபை’ செய்திருக்கிறார்கள். 35 வயதிற்கும் குறைவாக இருப்பவர்களை நியமித்து, அந்தப் பட்டியலை முரசொலியில் முறையாகத் தொடர்ந்து வெளியிட்டார்கள். 78 கழக மாவட்டங்களிலும் சோஷியல் மீடியாவிற்கு என்றே தனியாகத் துணை அமைப்பாளர்களையும் நியமித்திருக்கிறார்கள்.

இதன் தொடர்ச்சியாகத்தான், மண்டல வாரியாக இந்த நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெறுகிறது. 5 லட்சம் பேருக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையுடன் ஒரு இராணுவப் படையைப் போன்ற, உறுதியான கட்டமைப்பு, கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குடன் இது நடக்கிறது! அதனால்தான், பிப்ரவரி 7-ஆம் நாள் விருதுநகரில் கூட்டம் என்று சொன்னதும், எனக்குள் புது உற்சாகம் உண்டானது! இந்த விருதுநகர் மாநாட்டில், எதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து இயங்க வேண்டும். இளைஞர்களான நீங்கள் எவ்வாறு கொள்கையுடன் செயல்பட வேண்டும். எதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் தமிழ்நாட்டில் தொடர வேண்டும் என்பது பற்றியெல்லாம், இளைஞர்களான உங்களிடம் ஷேர் செய்யப் போகிறேன்! பிப்ரவரி 7 - விருதுநகரில் சந்திப்போம்!

வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு அக்காணொலியில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

## “இந்த இயக்கத்தை இளைஞர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை - உதயநிதி சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்!”



**எங்களுக்கு அடுத்தபடியாக, இப்போது, இந்த இயக்கத்தை இளைஞர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை – அந்தக் கடமையை – தம்பி உதயநிதி அவர்கள் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்!**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது, எப்போதும் வன்மத்தோடு இருக்கும் எதிரிகள் என்ன கட்டமைத்தார்கள்? இளைஞர்கள் இனி தி.மு.க.விற்கு வருவார்களா என்று சந்தேகம் எழுப்புவது போன்று, தங்களுடைய ஆசைகளை வெளிப்படுத்திக் கொண்டு இருந்தார்கள்! அதையெல்லாம் உடைத்து, தம்பி உதயநிதி அவர்கள், இளைஞரணிக்கு இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் நிர்வாகிகளை நியமித்து, சாதனை செய்திருக்கிறார்!**

### விருதுநகரில் இன்று 1 லட்சம் பேர் பங்கேற்கும்

# தி.மு.க. தென்மண்டல இளைஞர் அணி சந்திப்பு கூட்டம்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

விருதுநகர், பிப். 7 -

விருதுநகர் அருகே ஒரு லட்சம் பேர் பங்கேற்கும் திமுக இளைஞரணி தென் மண்டல நிர்வாகிகள் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இதுகுறித்து விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் நிதி அமைச்சருமான தங்கம் தென்னரசு நேற்று அளித்த பேட்டியில், விருதுநகர் அருகே கல்குறிச்சியில் தி.மு.க. தென் மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது. இதில் திண்டுக்கல் முதல் கன்னியாகுமரி வரை தென் தமிழகத்தில் உள்ள 10 மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்க உள்ளனர். முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமை வகித்து உரையாற்றுகிறார்.



இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் மாநாடு போல் நடைபெறும். அமைச்சர்கள் பலரும் கட்சி நிர்வாகிகள் பலரும் இதில் பங்கேற்கின்றனர். அரசு ஆணைப்படி அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்பட்டு சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளிலும் முறையாக அனுமதி பெற்று இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

மாநாட்டுக்கு வரும் அனைவருக்கும் குடிநீர், வாகன வசதி, மின்விளக்கு, உணவு, கழிப்பறை உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மருத்துவ குழுவினரும் தயார்படுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் காலம் என்பதால் எத்தகைய தகவல்களை இந்த மாநாட்டில் முதல்வரும் துணை முதல்வரும் தெரிவிக்கிறார்கள் என்பதை எதிர்பார்க்கலாம். தேர்தலை ஒட்டி மிகப்பெரிய செய்தி இருக்கும் என்று கூறினார்.



தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தஞ்சாவூர் மாவட்டத்தின் மறைந்த மொழிப்போர்த் தளபதி எல்.கணேசன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் (5.2.2026) நேரில் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் முனைவர் கோவி. செழியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ., து.செல்வம், ச.முரசொலி எம்.பி., டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., நா.இளையராஜா, சண். ராமநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.